**தலைப்பு 225 - பொலிஸ் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 225- பொலிஸ் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 03 ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 57,868.94 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 54,224.02 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 3,644.92 மில்லியன் அல்லது 6.3 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 52,329.15 | 51,343.70 | 985.45 | 1.88 |
| மூலதனம் | 5,539.79 | 2,880.32 | 2,659.47 | 48.01 |
| **மொத்தம்** | 57,868.94 | 54,224.02 | 3,644.92 | 6.30 |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 1,687.08 | 1,005.08 | 1,387.08 | 1,609.11 | 4,000.00 | 1,759.85 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0031/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் மீதி ரூபா 51.6 மில்லியனாகக் காணப்பட்டது.

**2.4 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழான 05 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 296.4 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா. மில்லியன்** |
| 6000/0000/00/0001/0062/000 | 4.75 |
| 6000/0000/00/0002/0080/000 | 0.04 |
| 6000/0000/00/0013/0050/000 | 34.40 |
| 6000/0000/00/0016/0032/000 | 255.06 |
| 6000/0000/00/0018/0040/000 | 2.19 |
| மொத்தம் | 296.24 |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

பொலிஸ் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கனணிகள், துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 11 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதியேற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் அவ் செலவின விடயங்களுக்கான சேமிப்பானது அத்தகைய செலவின விடயங்களுடன் தொடர்புடைய தேறிய நிதியேற்பாடுகளின் 17 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ii) ஒரு செலவின விடயத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 500,000,000 நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 614,760 தீர்த்து வைக்கப்படாத முற்பணக் கணக்கு மீதியில் ரூபா 435,510 ஆன தொகை 2016 ஒக்தோபர் 14 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 5,794,934 கூட்டுத்தொகையான 2 வைப்புக்கள் தொடர்பாக 2 வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வூதிய நடவடிக்கைகளுக்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதிய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ரூபா 1,386,651 ஆன தொகையில், ரூபா 181,800 ஆன தொகையானது 2016 ஒக்டோபர் 14 ஆம் திகதி வரையிலும் அது சம்பந்தமாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கில் காணப்பட்டது.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்ட ரூபா 388,254 தொகையான 06 காசோலைகளில் ரூபா 218,803 தொகையான காசோலையொன்று 2016 ஒக்தோபர் 14 வரையிலும் வைப்புக்கணக்கில் தொடர்ந்து காணப்பட்டது.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 479,316 தொகையான முத்திரை வரியில் ரூபா 187,325 ஆக தொகை 2016 ஒக்தோபர் 14 வரையிலும் வைப்புக் கணக்கில் காணப்பட்டது.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையாகவுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 133,676,044 ஆகவும் மற்றும் அந்த தொகையானது 2016 செப்தெம்பர் 30 இல் ரூபா 128,043,755 ஆகவும் காணப்பட்டது. இந் நிலுவை கடன் மீதிகள் 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து காலங்கடந்திருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் பிரகாரம், பிரதேச அலுவலகங்களினால் தயாரிக்கப்பட்ட திணைக்களத்தின் கட்டுப்பாட்டு கணக்கிற்கும் தனிப்பட்ட ரீதியான மீதிகளின் வகைப்படுத்தலுக்கும் இடையில் ரூபா 3,935,763 தொகையான இனங்காணப்படாத வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மட்டக்களப்பு பிரதேசத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 211,794 ஆன தொகை மிகையாக அறவிடப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 வரை அப் பணத்தினை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொலிஸ் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வறிக்கை 2016 ஆகஸ்ட் 31 வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பொலிஸ் திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) பொறுப்புக்கள்

மீளாய்வாண்டின் போது 02 செலவின விடயங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக நிதியேற்பாடுகளை பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 7,833,283 இனால் சேமிப்புக்களை விஞ்சிய பொறுப்புக்களின் கடப்பாடுகள் விஞ்சியிருந்தது.

**3.8 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டிற்கான பொலிஸ் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) உடல் ரீதியாக தீங்கு விளைவிக்கப்பட்ட குற்றங்கள்

இலங்கையில் 2013,2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பதிவாகியுள்ள உடல் ரீதியாக தீங்கு விளைவிக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான மீளாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **2015** | **2014** | **2013** |
|---|---|---|---|
| அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை | 40,188 | 50,962 | 55,349 |
| தீர்த்துவைக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை | 13,049 | 29,396 | 32,791 |
| தீர்த்துவைக்கப்படாத குற்றங்களின் எண்ணிக்கை | 27,139 | 21,566 | 22,558 |
| அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கையின் சதவீதமாக தீர்த்து வைக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை | 32.47 | 57.68 | 59.24 |
| அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கையின் சதவீதமாக தீர்த்து வைக்கப்படாத குற்றங்களின் எண்ணிக்கை | 67.53 | 42.32 | 40.76 |

ஒவ்வொரு வருடமும் தீர்த்துவைக்கப்படாத முறைப்பாடுகளுடன் தொடர்புடைய தகவல்களை திரட்டும் முறைமையிலுள்ள குறைபாடு காரணமாக, 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான தீர்த்துவைக்கப்படாத முறைப்பாடுகளின் உண்மையான எண்ணிக்கையினைக் கண்டுபிடிப்பது சாத்தியமற்றதாகக் காணப்படுகின்றது. அதற்கமைய கடந்த வருடங்களுக்கான தீர்த்து வைக்கப்படாத குற்றங்களுக்கான பின்தொடர் நடவடிக்கைகளும் நலிவடைந்து காணப்பட்டது.

(ஆ) போக்குவரத்து முகாமைத்துவமும், வீதிப் பாதுகாப்பும்

இலங்கையில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பதிவாகியுள்ள வீதி விபத்துக்கள் தொடர்பான மீளாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **2015** | **2014** |
|---|---|---|
| அபாயகரமான விபத்துக்களின் எண்ணிக்கை | 2,590 | 2,261 |
| பெரும் காயத்தை உண்டாக்கிய விபத்துக்களின் எண்ணிக்கை | 7,719 | 6,847 |
| சிறு காயத்தை உண்டாக்கிய விபத்துக்களின் எண்ணிக்கை | 13,095 | 12,950 |
| தேசங்களை உண்டாக்கிய விபத்துக்களின் எண்ணிக்கை | 13,514 | 13,992 |
| மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை | 36,918 | 36,050 |

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் அபாயகரமான விபத்துக்களின் எண்ணிக்கையும், பெரும் காயத்தை உண்டாக்கிய விபத்துக்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்களவு தொகையில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

(ஈ) அறிக்கையிடப்பட்ட சட்டவிரோத போதைப் பொருட்களும், கைது செய்யப்பட்டமையும் குற்றம் சாட்டப்பட்டமையும்

இலங்கை பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படை ஆகியோர் ஒன்றுசேர்ந்து சட்டவிரோத போதைப் பொருள் (ஹெரோயின், கஞ்சா, கொக்கேன், ஒபியம் மற்றும் ஏனையவை) தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டமையும் கைது செய்யப்பட்டமையும் தொடர்பான கடந்த 3 வருடங்களுக்கான தகவல்கள் பின்வருமாறு.

| வருடம் | கைது செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை | அறிக்கையிடப்பட்டவையின் எண்ணிக்கை | குற்றம் சாட்டப்பட்டவையின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்டவற்றிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவைகளின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 2013 | 10,837 Kg<br>2,777 g<br>1,800 mg | 73,383 | 70,678 | 96.31 |
| 2014 | 11,117 Kg<br>1,522 g<br>3,012 mg | 74,366 | 71,712 | 96.43 |
| 2015 | 13,548 Kg<br>2,435 g<br>2,686 mg | 89,996 | 87,846 | 97.61 |

அதற்கமைய, 2013, 2014 மற்றும் 2105 ஆம் ஆண்டுகளில் கைதுசெய்யப்பட்ட போதைப் பொருட்களின் எண்ணிக்கையால் சட்டவிரோத போதைப்பொருள் பாவனை அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது.

**3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 8 வருடங்களுக்கு முன்னர் ரூபா 13,245,717 ஆன உயர் பெறுமதியுடைய எட்டுத் தொகுதி மோட்டார் வாகனங்களினை தேடும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இவ் உபகரணங்கள் எவ்வித விடயங்களுக்கும் விநியோகிக்கப்படாது கொட்டாஞ்சேனையிலுள்ள பொலிஸ்மா அதிபரின் களஞ்சியசாலையில் விளைவற்றுக் காணப்படுகின்றன.

(ஆ) 2014 ஆம் அண்டில் ஆயிரம் ஆடைகளைக் தொங்கவிடும் சட்டகம் ரூபா 2,000,000 ஆன தொகையில் உபபொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டன. இவற்றில் கணிசமான எண்ணிக்கையான ஆடைகளைக் தொங்கவிடும் சட்டகம் மகர பொலிஸ் களஞ்சியங்களில் விளைவற்றுக் காணப்படுகின்றதுடன் இவை தரம் குன்றிய மரப்பலகைகளினால் தயாரிக்கப்பட்டதன் காரணத்தினால் அத்துப்பூச்சி போன்ற பூச்சிகளால் சேதத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தது. அதேபோல் கேள்வி மனுவானது

திணைக்களத்தினுடைய விதப்புரைகளுக்கிணங்க ஒரு அரை வருட உத்தரவாதத்துடன் அழைக்கப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 16 ஆந் திகதியிலுள்ளவாறு அரைவருட உத்தரவாதக் காலம் கடந்த நிலையிலும் கூட, பெரிய எண்ணிக்கையிலான ஆடைகளைத் தொங்கவிடும் சட்டகங்களை விநியோகிப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 9,900,000 ஆன தொகைக்கு முப்பதாயிரம் மீற்றர் சீருடைத் துணி (வெள்ளை) 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு கொட்டாஞ் சேனையிலுள்ள பொலிஸ்மா அதிபரின் களஞ்சியத்தினால் பெறப்பட்டிருந்தது. அத்திகதியில் 1468 மீற்றர்கள் மீதமான துணிகள் களஞ்சியசாலையில் காணப்பட்டதுடன், அவ் சீருடைத் துணிகளின் (வெள்ளை) விநியோகம் மந்தகதியில் காணப்பட்டது. எவ்வாறாயினும் 2015 செப்தெம்பர் 22 இல் உள்ளவாறு 21,577.92 மீற்றர் துணி மீதமாகக் காணப்பட்டது. அதற்கமைய, 2014 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் வரையிலான விநியோகத்திற்கமைய, 2015 செப்தெம்பர் 22 ஆம் திகதி வரையிலுள்ள துணிகளின் விநியோகத்தை பூர்த்தி செய்ய மேலும் 4 வருடங்கள் எடுக்கும் என அவதானிக்கப்பட்டது. மேலும், மீதமாகவுள்ள சீருடைத் துணிகளானது பொலிஸ்மா அதிபரின் களஞ்சியத்தில் அழுக்கு மற்றும் தூசி நிறைந்த சூழலொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பொலிஸ் உத்தியோகத்தர் தரத்திலுள்ள அலுவலகர்களுக்காக 1,000 மரப்படுக்கைகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 6,373,874 ஆன தொகை 07 கொடுப்பனவு சீட்டுக்கள் மூலமாக ஒரு தனியார் நிறுவனத்திற்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட கொள்வனவு தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டத்தில் மரப்படுக்கைளுக்கான கொள்வனவுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ii) கொள்வனவு நடைமுறைகளுக்கு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் செலவழிக்கப்பட்டிருந்தமை
(iii) தொழிநுட்ப விதப்புரைகள் முழுமையாகத் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.
(iv) ஏலக்காரரை தெரிவு செய்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தம் செய்த விதப்புரைகளுக்கமைய மரப்படுக்கைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.
(v) மரத்தினுடைய பாதுகாப்புத் திரவத்தினுடைய தரம் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட படுக்கைகளின் மரத்தினுடைய பதப்படுத்தல் தொடர்பாக எவ்வித உத்தரவாதமும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் அறுபது விரிவுரை மண்டப கதிரைகள் ரூபா 231,000 ஆன தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. திணைக்கள விதப்புரை தாளிற்கு இணைக்கப்பட்ட புகைப்படத்திற்கமைய விரிவுரை மண்டப கதிரைகள் இடது கை தரிப்பிட பின்னல் கதிரையாக காணப்பட வேண்டிய போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட கதிரைகளிடையே இடது கை தரிப்பிடம் காணப்படாததுடன் உட்காரும் பகுதியானது நீண்டு குறுகிய துண்டு மரப்பலகைகளினால் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொலிஸ் கண்காணிப்பு உத்தியோகத்தர்களுக்காக நுவரெலியா நகரில் கட்டப்பட்ட சுற்றுலா விடுதிக்கு ஒரு தனியார் கம்பனியினால் ரூபா 1,425,350 பெறுமதியில் 4915 சதுர மீற்றர் திரைச்சீலைகள் தைக்கப்பட்டு மற்றும் பொருத்தப்பட்ட போதிலும், உடன்படிக்கைக்கு அமைய அதன் தரம் தொடர்பாக விசேடத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனத்திடமிருந்து எந்தவொரு உறுதிப்பாட்டையும் எடுத்திருக்கவில்லை.

(இ) தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரைகளை உதாசீனம் செய்து 2014 ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் ரூபா 14,990 பெறுமதியில் பொலிஸ் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 100 மரத்திலான அலுமாரிகள் ரூபா 1,499,000 ஆன தொகைக்கு உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ் அலுமாரிகள் அந்தப்பூச்சி மற்றும் ஏனைய மரத்தினை அழிக்கும் பூச்சிகளினால் சேதமாக்கப்பட்டு களுத்துறையிலுள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் 2015 செப்தெம்பர் 30 வரை விளைவற்றுக் காணப்படுகின்றன.

(ஈ) 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து ரூபா 174,197,923 பெறுமதியான மிருகங்கள், மிருக உணவுகள், மிருக உயிர் சத்துக்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் திணைக்களத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ்விரு நிறுவனங்களும் கீழே குறிப்பிடப்பட்ட பின்வரும் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருக்கவில்லை.

(i) 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கால்நடை உணவுக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இறக்குமதி, விநியோகம் மற்றும் விற்பனைக்கான அனுமதியானது ஒவ்வொரு ஆண்டும் கால்நடைகளின் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் பெறப்படுதல் வேண்டும்.

(ii) 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க கால்நடைகளின் வியாதிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கான மருந்துக்களின் இறக்குமதிக்காக கால்நடைகளுக்கான மருந்துக்களின் நிறுவனத்திலிருந்து அனுமதி பெறப்படுதல் வேண்டும் (அதற்கமைய செல்லுபடிக் காலம் 3 வருடங்கள்)

(iii) கால்நடை வியாதிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனைத்து இறக்குமதிகளிற்காகவும் கால்நடைகளின் இறக்குமதி தொடர்பாக முழு அனுமதியானது கால்நடைகளின் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திலிருந்து பெறப்படுதல் வேண்டும்.

(உ) பொலிஸ் திணைக்களத்தின் குதிரைப்படை பிரிவுக்கு சொந்தமான ரூபா 60,232,873 பெறுமதியான முப்பத்தியொரு உத்தியோகபூர்வ குதிரைகள் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 மே 29 ஆம் திகதியான ஐந்து அரையாண்டு காலத்தினுள் இறந்துள்ளன. இறந்தவற்றில் 25 குதிரைகள் கொள்வனவு செய்யப்பட்ட நாட்களிலிருந்து குறுகிய காலமே உயிர்வாழ்ந்தன. குதிரைகளினுடைய பிரேதப் பரிசோதனை தொடர்பான மிருக வைத்தியரின் அறிக்கையின் பிரகாரம் வயிற்றில், உணவுப் பாதையில் அல்லது சமிபாட்டுத் தொகுதியிலேற்பட்ட தொற்றுக்களே குறிப்பிட்ட அதிகமான இறப்புக்களுக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. கொழும்பு 11 கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் குதிரைப்படைப் பகுதியானது, அடிக்கடி ஏற்படுகின்ற இரைச்சலால் மாசடைதல், உயர் மட்டத்திலான சூழல் மாசடைதல் மற்றும் குதிரைகள் உயிர்வாழ்வதற்கு சாதகமற்ற ஓர் இடமாகக் காணப்படுகின்றது என மிருக வைத்தியர்களினால் அறிவுறுத்தப்பட்டதனால் இது தொடர்பில், ''ஐம்பது ஏக்கர் நிலப் பரப்பு இதற்கு என ஹெரனப் பிரதேசத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது'' என சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (நிர்வாகம்) எனக்கு அறிவுத்துள்ளார். குதிரைகளினுடைய சிறந்த ஆரோக்கிய நிலமைகளை அதிகரிப்பதற்காக இக் குதிரைகளை எடுத்துச் செல்வதற்கும், நிலையாக அவ்விடத்தில் வைத்திருப்பதற்குரிய செயற்பாட்டிற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் அவ் இடத்தில் இனப்பெருக்கத்தினூடாக குதிரைகளை பொலிஸ் குதிரைப் படை பிரிவுக்கு பெற்றுக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.11 பெறுகை நடைமுறையிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் ஒரு தனிப்பட்ட நிறுவனமொன்று போலியான விலாசத்தினைப் பயன்படுத்தி ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரினால் நிறுவப்பட்டுள்ளதுடன் பொலிஸ் திணைக்களத்திற்கு தளபாடம் உபகரணங்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளுக்கமைய 2011 ஆம் ஆண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் ரூபா 284,525 கூட்டுத்தொகையான தளபாடங்கள் அவ் நிறுவனத்திடமிருந்து திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதே பெண் உத்தியோகத்தரின் வியாபாரப் பெயரினைப் பயன்படுத்துவதன் மூலம், 2011 ஆம் ஆண்டில் ஒரு வெளி நபரோருவரினால் போலியான ஒரு விலாசத்தினை குறிப்பிடுவதன் மூலம் ஒரு தனிப்பட்ட நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டமைக்கமைய 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,801,992 ஆன பெறுமதியான தளபாடங்கள் இவ் முகவரினால் 04 போலியான விலாசமிடப்பட்ட கடிதத் தலைப்பின் மூலம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(இ) இதற்காக மீண்டும் ஒரு போலியான விலாசத்தினை வெளித்தரப்பு விநியோகஸ்தர் சமர்ப்பித்ததுடன் 2011 ஒக்தோபர் 12 இல் மற்றுமொரு வியாபார பெயரினை பயன்படுத்தி ஒரு தனிப்பட்ட நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. வெளிப்படுத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்கமைய அதே விநியோகஸ்தரினால் 02 போலியான வியாபார பெயர்களின் கீழ் 04 சந்தர்ப்பங்களில் கேள்வி மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 03 சந்தர்ப்பங்களின் போதும் ரூபா 1,284,350 ஆன பெறுமதியான தளபாடங்கள் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3.12 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 878 | 531 | 347 |
| (ii) | மூன்றாம் நிலை | 4,644 | 3,570 | 1,074 |
| (iii) | இரண்டாம் நிலை | 98,764 | 83,555 | 15,209 |
| (iv) | ஆரம்ப நிலை | 2,521 | 1,952 | 569 |
| | மொத்தம் | 106,807 | 89,608 | 17,199 |